**ஆகஸ்ட் - 30**

**"இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது." - மத் 5 : 16.**

கர்த்தரால் அபிஷேகம் பெற்றவர் (கிறிஸ்து) எல்லோருக்கும் மேலாக தலையும் புயமுமாயிருப்பார். "பதினாயிரம் பேர்களில் சிறந்தவர்" "முற்றிலும் அழகுள்ளவர்" என்கிறது உண்மை. கிறிஸ்து முழு உலகத்திற்கும் ராஜாவாக அதிகாரப்பூர்வமாக விளம்பரம் செய்யப்படுவதற்கு முன்பு, இந்த ஜீவியத்தில் கிறிஸ்துவின் சரீரத்தின் அங்கங்களோடு நெருங்கிய சம்பந்தம் கொண்டிருக்கிற எல்லோரும், மனிதருடைய விவகாரங்களில் கனம் பொருந்தியவர்களாக இருப்பதற்காக, கர்த்தர் தேர்ந்தெடுத்திருக்கிற அவர்களிடம் குணத்தின் பெருந்தன்மையையும், மேன்மையையும் கண்டுகொள்ளக் கூடியவர்களாக இருப்பார்கள் என்பதும் கணிசமான அளவிற்கு உண்மையாக இருக்க வேண்டும். அவர்கள் யேசுவோடு இருந்திருக்கிறார்கள் என்பதை அவர்கள் அறிந்துகொள்ளக் கூடியவர்களாக இருக்க வேண்டும். அவர்களுடைய பெருந்தன்மையையும் நல்நடத்தைக்குரிய மேன்மையையும் கண்டிருக்க வேண்டும். அதாவது அவர்களில் ஒரு தெளிந்த புத்தியின் ஆவியை கண்டு கொண்டிருக்க வேண்டும். **- Z ’03, 206 (R 3218)**

சத்தியமும் அதன் பலனாய் ஏற்படுகிற ஆவியையும் கிரியைகளுமே, நம்முடைய வெளிச்சம். கட்டளைகளாலும் மாதிகளாலும் போதனையாக இவைகளை மற்றவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதையே இவ்வெளிச்சத்தை மனுஷர் முன்பாகப் பிரகாசிக்கச் செய்வதாகும். அதிலுள்ள நம்முடைய உத்தேசம், மற்றவர்களின் மதிப்பிடுதலில் நம்மையே பிரகாசிக்கச் செய்வதாய் இருக்கக் கூடாது. ஆனால், அதனாலே நம்முடைய எல்லா நன்மைகளையும் உண்டாக்கினவராகிய கர்த்தர் மேல் புகழை பிரதிபலிக்கச் செய்ய வேண்டும். மிகவும் கவனத்தோடு, நம்மையே மறக்கப்பட்ட நிலையில் வைத்திருக்க நாட வேண்டும். இன்னும் அதிகக் கவனத்தோடு, நம்முடைய உபதேசங்கள், ஆவி, கிரியைகள் இவைகளின் மூலமாக கர்த்தரின் மகிமை மற்றவர்கள் முன்பும், மற்றவர்கள் மேலும் பிரகாசிக்கச் செய்ய நாம் முயற்சி செய்ய வேண்டும். இவ்விதமாக நம்முடைய அழைப்பின் நோக்கத்தை நாம் நிறைவேற்றுவோம். **- P ’34, 110.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**நீதி 4:18,19; ஏசா 58:8-10; 60:1-3; ரோம 13:11-14; எபே 5:8; 1தெச 2:12; 5:5-8; 1யோவா 1:5-7; 1பேது 2:12; யோவா 15:8; 1கொரி 14:25.**

**கோபுர வாசிப்பு : Z ’12, 96 (R 4992)**

**வினாக்கள் : இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்த வாரத்தின் அனுபவங்கள் எவை? அவை எவ்வாறு சந்திக்கப்பட்டன? அதன் பலன் என்ன?**